www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 6

தேர்வு எண் 6 1 1 3

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA) - 2024 - 25

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6X1=6

1. அன்னை தெரசாவிற்கு --------க்கான நோபல் பரிசு கிடைத்தது.

அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி

2. கலைக்கூடமாகக் காட்சி தருவது

அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

3. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆட

4. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு

அ) இலங்கைத்தீவு ஆ) இலட்சத்தீவு இ) மணிபல்லவத்தீவு ஈ) மாலத்தீவு

5. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்

அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

6. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது ------

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

**ஆ) பொருத்துக.** 4x1=4

7. இலக்கிய மாநாடு – பாரதியார்

8. தமிழ்நாட்டின் சொத்து – சென்னை

9. குற்றாலம் – ஜி.யு. போப்

10. தமிழ்க் கையேடு – அருவி

**இ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** 5x2=10

11. யாரால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது?

12. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?

13. காந்தியடிகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வு யாது?

14. தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

15. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவையாவை?

16. இன்ப நிலை எப்போது சேரும்?

17. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

**ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3x4=12

18. மணிபல்லவத் தீவு எவ்வாறு காட்சியளித்தது?

19. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

20. குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுக.

நாய்க்குட்டி –குழிக்குள் – கத்தும் சத்தம் – முகிலன் – முதலுதவி – பால் – தூங்கியது – வாலாட்டியது



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

21. சொல் என்றால் என்ன? சொற்களின் வகைகளை எழுதுக.

22. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழ புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

உ) அடிபிறழாமல் எழுதுக. 2+4=6

23. 'பகுத்துண்டு' – எனத் தொடங்கும் குறளை அடி மாறாமல் எழுதுக.

24. 'புல்வெளி' – எனத் தொடங்கும் பாடலை அடி மாறாமல் எழுதுக.

ஊ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 10x1=10

25. கலைச்சொல் அறிக.

அ) TRUST ஆ) VOLUNTEER

26. அகரவரிசைப்படுத்துக.

ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை, அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஊக்கம், ஏது, ஔவை.

27. பிழைகளைத் திருத்தி எழுதுக.

ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

28. புதிர்ச்சொல் கண்டுபிடி

அ) இச்சொல் மூன்றெழுத்துச் சொல்

ஆ) உயிர் எழுத்துகள் வரிசையில் முதல் எழுத்து இச்சொல்லின் முதல் எழுத்து.

29. இருபொருள் தருக :

அ) திங்கள் ஆ) ஓடு

30. ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

அ) அரம் – அறம்

31. அகராதியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

அ) கருணை – ஆ) அச்சம் –

32. தமிழெண்கள் எழுதுக.

56, 28, 542, 102

33. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

செடிகொடிகள்

34. விடுபட்ட சீர்களை நிறைவு செய்து குறளை மீண்டும் எழுதுக.

அ) ........ பல்லுயிர் ஓம்புதல் --------

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி. 1x6=6

35. வேலு நாச்சியார் சிவகங்கையை மீட்டெடுத்த நிகழ்வை விளக்குக.

36. பாதம் என்ற சிறு கதையைச் சுருக்கி எழுதுக.

ஏ) கடிதம் / கட்டுரை எழுதுக. 1x6=6

37. அ) தேசிய ஒருமைப்பாடு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நூல்கள் அனுப்ப வேண்டி பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner